# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2068/19 - 2018 අප්‍රේල් මස 25 වැනි බදදා - 2018.04.25

*2068/19 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: கேயூ/பிஎல்ஜீ/2016/627.
காணி அமைச்சின் இல.: 4 - 3/7/2016/HW/82.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹவலை பிரதேச செயலாளர் பிரிவின், இல. 912, கொரதொலுவ கிராம அலுவலர் பிரிவில் வேவல மற்றும் கொரதொலுவ கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட இ. கி. வ. இல. கு 2357 எனும் வரைபடத்தில் கீழே குறிப்பிடப்படும் விபரங்கள் அடங்கிய காணித் துண்டுகள்:

*1.* **துண்டு இல.** *1*
காணியின் பெயர்: - ; விபரம்: பாதை; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: உரிமை கோருவோர் தேடிக்கொள்ள முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0019 ஹெக்டயார்.

*2.* **துண்டு இல.** *2*
காணியின் பெயர்: - ; விபரம்: பாதை; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: உரிமை கோருவோர் தேடிக்கொள்ள முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0105 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பொல்கஹவலை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. அனோமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவலை.

பிரதேச செயலகம்,
பொல்கஹவலை,
2018, ஏப்பிறல் 05.

5 - 189

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2014/எச்டபிள்யூ/185.
எனது குறிப்பு இல.: 4/6/எம்ஈ/452.

2018, மாச்சு 21 ஆந் திகதிய 2063/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் விசாரணைத் திகதி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு உடுநுவர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
உடுநுவர.

பிரதேச செயலகம்,
உடுநுவர,
2018, ஏப்பிறல் 20.

5 - 190

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.